## 42. உம்மை போல என்னை மாற்றுமே

### பல்லவி

உம்மை போல என்னை மாற்றுமே
என் இயேசுவே என் இயேசுவே
உம் சாயலாய் என்னை மாற்றுமே
என் இயேசுவே என் இயேசுவே

### சரணங்கள்

1. மோசேயை சந்திக்க முட்செடியில் எரிந்த
அக்கினி என்னில் எரியனுமே
என்னை காண்கிற யாவரும்
உம்மையே என்றும் காணணுமே
- உம்மை போல

2. ஒவ்வொரு நாளாய் எனது மனது
புதிதாக்க படவேண்டுமே
உம் பிரசன்னத்தால் மூடுமே
உம் மகிமையால் என்னை நிரப்புமே
- உம்மை போல

3. ஆவியாயிருக்கிற கர்த்தராலே
தேவசாயல் அடைந்திடுவேன்
மகிமைமேல் மகிமையடைந்து
மறுரூபமாக மாறிடுவேன்
- உம்மை போல